# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2020

## திருகோணமலை தேர்தல் மாவட்டம்

# அகில இலங்கை தமிழர் மகாசபை

## (கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சி)

**திருகோணமலை மாவட்டத்தின் வாக்காளப் பெருமக்களே!**

இதுகாலவரை தமிழர் மகாசபை திருகோணமலை மாவட்டத்தில் நிறைவேற்றிய முக்கிய பணிகளை முதற்கண் பதிவு செய்ய விரும்புகின்றோம்:

1. கிழக்கிற்கு ஒதுக்கப்பட்ட 20 அறிவியல் நிலையங்களில் 09 நிலையங்களை, திருகோணமலை மாவட்டத்தில் திரியாய், கும்புறுப்பிட்டி, ஆத்திமோட்டை, புளியங்குளம், ஆலங்கேணி, தம்பலகாமம், மல்லிகைத்தீவு, கிளிவெட்டி, ஈச்சிலம்பற்று ஆகிய இடங்களில் 2010ஆம் ஆண்டில் இந்திய உதவியுடன் நிறுவினோம்.

2. கிழக்கிலுள்ள 261 மகா வித்தியாலங்களுக்காக 2011ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் கிடைத்த 1260 கணனிகள் மற்றும் 215 அச்சடிப்பு இயந்திரங்களில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 90 பாடசாலைகளுக்கு 432 கணனிகளையும் 64 அச்சடிப்பு இயந்திரங்களையும் அன்பளிப்புச் செய்தோம்.

3. திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான கிண்ணியா, உப்பாறு, கங்கை, இறால்குழி எனும் பாலங்களை கட்டி முடிக்கும்வரை இந்நகரங்களுக்குகான தரைவழிப் பிரயாணத்தை விரைவுபடுத்துவதற்காக 2011இல் 5 ரயில்பஸ்களையும், கிழக்கு மாகாண சபைக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் கோவில்களுக்குமாக 10 மினிபஸ்களையும், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் பெற்றுக்கொடுத்தோம்.

4. 2009 இறுதி யுத்தத்தில் வடக்கில் காயப்பட்ட பொதுமக்கள் கடல் மார்க்கமாகக் முல்லைத்தீவில் இருந்து புல்மோட்டைக்குக் கொண்டுவரப்பட்டு உடனடிச் சிகிச்சைக்காக புல்மோட்டையில் இந்திய வைத்தியர்களைக் கொண்ட **தற்காலிக மருத்துவமனை** ஒன்றை நிறுவுவதற்கு வழிவகுத்தோம்.

5. திருகோணமலையின் **வடக்கு எல்லையான தென்னமரவடி** 1984ஆம் ஆண்டில் முற்றாக அழிக்கப்பட்டு அதியுயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டது. அதனை மீளப்பெற்று மீள்குடியேற்றத்தை 2011ஆம் ஆண்டில் ஆரம்பித்ததோடு முதலமைச்சர் சந்திரகாந்தனின் அனுசரணையுடன் அக்கிராமத்திற்கான வீதியைப் புனரமைத்து பஸ் சேவையையும் ஆரம்பித்து வைத்தோம்.

6. உப்புவெளி பிரதேசத்தில் 5 ஏக்கருக்கு மேற்பட்ட செம்பியன் தோட்டம் எனும் காணியை தமிழ்க் குடும்பங்கள் வீடுகள் கட்டுவதற்காக 10 பேர்ச் பரப்பளவு கொண்ட 82 துண்டுகளாகத் திருகோணமலை நகரசபை அன்பளிப்பு செய்திருந்தது. ஆயினும் அக்காணியை சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குக் கொடுத்து உதவுவதற்காக, 2009ஆம் ஆண்டில் வீடுகள் கட்டி இருந்தவர்களுக்குத் தண்ணீரும் மின்சாரமும் வழங்க பிரதேச செயலாளர் தடைவிதித்திருந்தார். எமது கட்சி திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் பிரதேச செயலாளருக்கு எதிராக **4 வழக்குகளைத்** தாக்கல் செய்து அனைத்துக் குடியிருப்பாளர்களுக்கும் அவர்களுடைய காணிகளுடன் தண்ணீரையும் மின்சாரமும் பெற்றுக்கொடுத்தோம்.

7. 2007இல் கிழக்கில் யுத்தம் முடியும் தறுவாயில் **சம்பூர் பிரதேசத்தில்** வாழ்ந்த அனைத்துத் தமிழர்களுடைய வீடுகளும் நிர்மூலமாக்கப்பட்டு அம்மக்கள் துரத்தப்பட்டதோடு அப்பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நிலையில் மீள்குடியேற்றம் எதுவும் இடம் பெறாவிட்டால் முழுப் பிரதேசத்தையும் தமிழர் இழக்கவேண்டிவரும் என்று உணர்ந்த எமது

கட்சி, ஒரு வியூகத்தைக் கையாண்டு சூடைக்குடா, நவரத்தினபுரம், கூனித்தீவு ஆகிய அதியுயர் பாதுகாப்பில் இருந்த கிராமங்களில் இந்திய வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து **சம்பூர் பிரதேசம்** முழுவதையும் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தோம்.

8. 2007இல் கிழக்கில் நடைபெற்று முடிந்த யுத்தத்தில் **சம்பூர் காளிகோவில்** பெரிதாகப் பாதிக்கப்படாத நிலையில் யுத்தத்திற்குப் பிற்பாடு அப்பிரதேசத்தில் மக்கள் நடமாட்டம் இல்லாததால் 2013ல் அக்கோவில் முழுமையாக சேதப்படுத்தப்பட்டது. அச்செயலுக்குப் பொறுப்பானவரும் 9 வருடங்கள் திருகோணமலை அரசாங்க அதிபராகப் பணியாற்றியவருமான **இராணுவ அதிகாரியை** வெளியேற்றும் கடினமான பணியையும் 2015இல் எமது கட்சியே நிறைவேற்றியது.

**(மேற்படி விடயங்கள் விளம்பரமோ ஆரவாரமோ இன்றி எம்மால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.)**

## தமிழர் மகாசபையின் எதிர்காலத் திட்டங்கள்

1. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை **பதவியில் அமர்த்த** ஒத்துழைத்த எமது கட்சி தொடர்ந்தும் அவரது அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு நல்குவதனாலும், கிழக்கு மாகாணசபைக்கு மீளுயிர் அளிப்பதனாலும் அதன் அதிகாரங்களைப் பயன்படுத்தியும் **வேலையற்ற** தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்குவோம்.

2. மாகாண சபைகள் அனைத்திற்கும் தேர்தல்களை நடாத்தி அச்சபைகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் அரசியல் யாப்பின் **13ஆவது திருத்தச் சட்டத்தை** முழுமையாக அமுல்படுத்துவதையும் உறுதி செய்வோம்.

3. 70 ஆண்டுகளுக்கு மேலாக நகர சபையாக இருந்த திருகோணமலையை **மாநகர சபையாகவும்,** உப்புவெளி பிரதேச சபையை **நகர சபையாகவும்** தரமுயர்த்துவோம்.

4. மூதூர் பிரதேசத்தினுள் அடங்கியுள்ள மல்லிகைத்தீவு, கிளிவெட்டி, பட்டித்திடல், கங்குவேலி, பெருவெளி, இருதயபுரம், பாலத்தடிச்சேனை, பாரதிபுரம், மேன்காமம், பள்ளிக்குடியிருப்பு, நல்லூர், சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு, கூனித்தீவு, நவரத்தினபுரம், கட்டைபறிச்சான் தெற்கு, சேனையுர், கட்டைபறிச்சான் வடக்கு, கடற்கரைச்சேனை ஆகிய 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் அடக்கியதான **கொட்டியாபுரம்** எனும் புதிய பிரதேச செயலகத்தினையும் பிரதேச சபையையும் உருவாக்கித் தருவோம்.

5. திருகோணமலையை வடக்குடன் தொடுக்கும் 1km நீளமான **கொக்கிளாய்ப் பாலத்தினைக்** கட்டி முடிப்பதற்கான அனைத்து செயற்பாடுகளையும் நாம் முன்னெடுப்போம்.

6. தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் **10,000 பேரை** வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 3 ஆண்டுகளில் நியமிப்பதற்கான நடவடிக்கை எடுப்போம்.

7. போர்க் காலத்தில் வடக்கு-கிழக்கை விட்டு வெளியேறிய தமிழர்களில் இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர்களையாவது மீண்டும் நாட்டுக்குக் அழைத்துவருவதுடன் அவர்களுக்காகவும் நாட்டில் ஏனைய வீடுகளற்றவர்களுக்காகவும் **65,000 வீட்டுதிட்டத்தையும்** ஆரம்பிக்க உள்ளோம்.

8. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொங்கீறிற் பொருத்து வீடுகள் கொடுப்பதை தமிழரசுக் கட்சியின் தலைமை எதிர்த்தது. எனினும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் **7 பொறியியலாளர்களைக் கொண்ட குழுவை** நியமித்தது; பொருத்து வீடுகளைப் பயன்படுத்துவதில் குறைபாடுகள் இருக்காது என்று அக்குழுவினர ஆலோசனை கூறினர். தற்போது, 24,000 பொருத்து

வீடுகளுள் 1,000ஐ நிர்மாணிக்கும் பணி **யப்கா** என்னும் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. **யப்கா**வுடன் **யுஅண்டா** என்னும் சீனக்கம்பனியும் இரகசியமாகச் இணைந்துள்ளது.

9. வேறு பிரதேசங்களிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து திருகோணமலையை நாடி வந்தவர்களை உப்புவெளியிலுள்ள **தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்திற்குரிய** காணியை **ஈ.பி.டி.பி.**யினர் பகிர்ந்தளித்தும், அம்மக்களுக்கு முறையான உறுதிகள் கிட்டவில்லை அவர்களுக்கான சட்டபூர்வமான காணி உறுதிகளை நாம் பெற்றுக்கொடுப்போம்.

10. திருகோணமலை மாவட்டத்தில் காணிகளற்ற அனைத்துக் குடும்பங்களுக்கும் அனுமதிப்பத்திரங்கள் மூலம் காணிகளை வழங்குவதுடன் 5 வருடங்களுக்குக் குறையாத காலம் காணிகளைப் பயன்படுத்தியவர்களுக்கும் உறுதிகள் வழங்கவும் நடவடிக்கை எடுப்போம்.

11. வடக்கு-கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட **89,000 பெண்கள் தலைமைக்** குடும்பங்களுக்கும், போர் காரணமாக மாற்றுத் திறனாளிகளானவர்களுக்கும், முன்னாள் போராளிகளுக்கும் நுண்நிதித் திட்டத்தின் ஊடாக உதவியை பெற்றுக்கொடுப்போம்.

12. **பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்** கீழ் 2 ஆண்டுகளுக்கு மேல் விசாரணையின்றித் தடுத்து வைத்திருப்பவர்களை விடுவித்தல் அல்லது அவர்களுக்குப் பிணை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

13. கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தை **சுயேச்சையான பல்கலைக் கழகமாகத்** தரம் உயர்த்துவோம்.

14. கன்னியாவில் **சர்வதேச இந்துக்கலாச்சார மண்டபம்** ஒன்றினை நிறுவுவோம்.

15. கந்தளாய் **சீனித் தொழிற்சாலையையும்** நிலாவெளி **உப்பளத்தையும்** புனரமைப்போம்.

16. **கப்பல்துறையில் ஆழ்கடல் மீன்பிடிக் கலங்கள்** உற்பத்தி செய்யும் முன்றில் ஒன்றினை அமைப்போம்.

17. திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு **புகையிரதப்பாதைகளைச்** சீர்ப்படுத்தி மேலதிக ரயில்களை சேவையில் ஈடுபடுத்துவோம்.

18. மாவட்டத்திலுள்ள **சிறுகுளங்களை** தேவைக்கேற்ப புனரமைப்பதோடு, லிங்கபுரத்திலிருந்து கிளிவெட்டிக்கான தரைப் பாதையைத் தரமுயர்த்துவதோடு, சாம்பல்தீவு, சல்லி, புளியங்குளம், செல்வநாயகபுரம், பாலையூற்று, சாந்திபுரம், இலுப்பைக்குளம் உள்ளிட்ட ஊர்களில் உள்ளூர்ப் பாதைகளையும் வாய்க்கால்களையும் சீர்படுத்துத்துவோம்.

19. பட்டித்திடலில் **அரிசி ஆலை** ஒன்றை அமைப்பதோடு கங்குவேலியில் **பால் பதனிடும் தொழிற்சாலை** ஒன்றினை நிறுவுவதோடும் திரியாயில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலை ஒன்றையும் நிறுவுவோம்.

20. பாட்டாளிபுரத்தில் செயலற்றுக் கிடக்கும் **ஆடைத் தொழிற்சாலையை** செயற்படுத்துவதோடு, குச்சவெளியிலும் வேப்பங்குளத்திலும் புதிய ஆடைத்தொழிற் சாலைகளை அமைப்போம்.

21. மாவட்டத்திற்கான பொருளாதார வலயத்தை **கன்னியாவில்** நிறுவுவதோடு, தகவல் தொழில்நுட்ப மையத்தை **கவட்டிக்குடாவில்** அமைப்போம்.



X



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | ~~3~~ | 4 | 5 | 6 | 7 |

விருப்பு வாக்குகள்

**Eng. Dr.** காசிலிங்கம் விக்னேஸ்வரன்

தலைவர், அகில இலங்கை தமிழர் மகாசபை
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முன்னாள் வடக்கு - கிழக்கு முதலமைச்சரின் செயலாளர்
முன்னாள் கிழக்கு முதலமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர்